**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 250 Of 2024

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 15- வது நாள் செவ்வாய்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. N.M. ராஜபதி | கிராமம்: | |
| க.பெ. (அ) த.பெ. | திரு. மாடசாமி | வேலை: | Partner, M/s. Lakshmi Motors. |
| வயது | 38 | செல்போன் எண் | |

பி.வா.சா.1 **திரு. N.M.** ராஜபதி ஆக 15.07.2025 அன்று ஆஜராகி

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

உங்களுடைய நிறுவனம் எத்தனை வருடங்களாக இயங்கி வருகிறது என்றால் 2017ல் இருந்து Partnership firm ஆக இயங்கி வருகிறது. 2017 முதல் 2019 வரை இருசக்கர வாகன Sub dealer ஆக இருந்து வந்தேன். 2019 முதல் 2025 ஆன தற்போது வரை என்ன வியாபாரம் செய்து வருகிறீர்கள் என்றால் சிவகாசியை தலைமை இடமாகக் கொண்டும் சென்னையை கிளை அலுவலமாக கொண்டும் Auto spares விற்பனை மற்றும் பிற நிறுவனங்களின் Auto spares விற்பனையை மேற்கொண்டு வருகிறோம். வேறு நிறுவனங்களின் Auto spares பொருட்களை விற்பனை செய்து வருகிறீர்களா என்றால் ஆமாம் மேற்படி விசயம் வாதி நிறுவனத்திற்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி நிறுவனப் பொருட்களை உங்களுக்கு ஒரு விலையில் கொடுத்து, நீங்கள் அதற்கு மேல் விலை வைத்து பொருட்களை விற்பது வழக்கம் என்றால் சரியல்ல. வாதி நிறுவனம் தான் Distributor/Purchase price மற்றும் வாடிக்கையாளர்களுக்கு விற்கப்படும் Retail price பட்டியலை எங்களுக்கு கொடுப்பார்கள். அதற்கு மேல் நாங்கள் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வதில்லை. நீங்கள் மேற்சொன்ன சங்கதிகளுக்கு எழுத்துபூர்வமான ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, உள்ளது. அதற்காக ஒப்பந்தம் எதுவும் செய்யப்பட்டதா என்றால் தனிப்பட்ட ஒப்பந்தம் இல்லை, Email மூலம் விலை விவரங்களை வாதி நிறுவனம் தெரிவிப்பார்கள். Whatsapp மூலமாகவும் எங்களுக்கு Message அனுப்பப்படும். இது விசயமாக நீங்கள் நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் வாதி நிறுவனத்தில் இருந்து பணம் செலுத்தி பொருட்களை வாங்குவீர்களா என்றால் இல்லை, Credit அடிப்படையில் தான் பொருட்களை வாங்குவோம். வாதி நிறுவனத்திடம் இருந்து பொருட்களை வாங்கி விற்பதில் உங்களுக்கு இலாபம் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். Jose என்பவர் வாதி நிறுவனம் சார்பாக பொருட்களை விற்கும் சமயத்திலும் Order எடுக்கும் சமயத்திலும் உடன் இருப்பார் என்று சொல்வதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. ஆவணம் உள்ளது தாக்கல் செய்ய இயலும். வாதி நிறுவனத்தின் பொருட்களை உங்கள் நிறுவனம் அல்லாது வாதி நிறுவனம் நேரடியாகவோ அல்லது வேறு வாடிக்கையாளர் நிறுவனங்கள் மூலமாக பொருட்களை விற்கக்கூடாது என சொல்வதற்கு உங்களிடம் எழுத்துபூர்வமான ஏதேனும் ஒப்பந்தம் உள்ளதா என்றால் இல்லை, தகவல் பரிமாற்றங்கள் உள்ளது. நாங்கள் சப்ளை செய்த வாடிக்கையாளர்களுக்கு மீண்டும் 2வது முறை வாதி நிறுவனம் பொருட்களை நேரடியாக சப்ளை செய்ததன் காரணமாக தான் இந்த பிரச்சனை எழுந்தது. பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5ல் வாதி நிறுவனம் குறிப்பிடப்பட்டுள்ள பிற நிறுவனங்களுக்கு பொருட்களை அவர்கள் பெயரில் விற்கக்கூடாது என சொல்வதற்கு உங்களிடம் எழுத்துபூர்வமான ஏதேனும் ஒப்பந்தம் உள்ளதா என்றால் இல்லை, எங்கள் பகுதியில் பிரதிவாதி நிறுவனத்தை Distributor ஆக நியமித்த காரணத்தினால் நாங்கள் சப்ளை செய்த நிறுவனத்திற்கு மீண்டும் 2வதாக வாதி நிறுவனம் சப்ளை செய்யக்கூடாது. வாதி நிறுவனத்திற்கும் உங்களுக்கும் தனிப்பட்ட ஒப்பந்தம் எதுவும் இல்லாத நிலையில் வாதி நிறுவனப் பொருட்களை பிரதிவாதி நிறுவனம் அல்லாது வேறு நிறுவனத்திற்கு வாதி பொருட்களை விற்பனை செய்யக்கூடாது என வழக்கிற்காக பொய் சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல. Distributorship Agreement/ ஒப்பந்தம் உள்ளது. Distributorship Agreement தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வாதி நிறுவனம் Form ஒன்றை பூர்த்தி செய்து கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். நீங்கள் அதன் நகலை பெற்றுக் கொண்டீர்களா என்றால் இல்லை, பலமுறை கேட்டுப்பார்த்தும்

தரவில்லை. மேற்படி விசயத்தை உங்கள் எதிர் உரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லி உள்ளீர்களா என்றால் இல்லை, நாங்கள் வாதி நிறுவனத்திற்கு Distributor இல்லை என்ற நிலை பாட்டை வாதி நிறுவனம் நீதிமன்றத்தில் தான் எடுத்தது என்ற காரணத்தினால் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. உங்கள் எதிர் உரை பத்தி 7 ல் வாதி பிரதிவாதிக்கு இடையே Distributorship Agreement க்கு மாறாக வாதி நிறுவனம் பொருட்களை விற்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் எதிர் உரை பத்தி 3 ல் பிரதிவாதி நிறுவனம் விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் சென்னை சிட்டி மாவட்டங்களுக்கு வாதி நிறுவனத்தின் தனிப்பட்ட Agent என குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர் உரை மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் ஒப்பந்தத்தை மீறி வாதி நிறுவனம் பொருட்களை விற்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. Sole selling Agent, Dealer, Distributor, Customer ஆகியவற்றிற்கு வித்தியாசம் உள்ளதா என்றால் வித்தியாசம் உள்ளது. நாங்கள் வாதி நிறுவனத்தின் Distributor ஆவோம். Sole selling Agent தான் Distributor ஆகும். Sole selling Agent என்ற முறையில் பொருட்களை விற்கும் சமயத்தில் உங்களுக்கு கமிஷன் கிடைக்கும் என்றால் சரியல்ல மாதத்திற்கு Sale Target நிர்ணயிக்கப்படும், Purchase செய்யப்படும் சமயத்தில் கமிஷன் கொடுக்கப்படும். வாதி மற்றும் பிரதிவாதி நிறுவனத்திற்கிடையே மேற்கொள்ளப்படும் Purchase Order, Sales, Receipt போன்றவற்றை பராமரித்து வருவது உண்டா என்றால் உண்டு. Sole selling Agent ஆக இருந்து வாதியிடம் இருந்த பொருட்களை வாங்கியோ அல்லது Credit அடிப்படையில் பொருட்களை வாங்கி விற்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. Sole selling Agent என்பவற்றின் சட்டத்திற்குட்பட்ட நடைமுறையை தெரிந்து தான் பொருட்களை விற்று வந்தீர்களா என்றால் ஆமாம். பொருட்களை கொள்முதல் செய்து அதிக விலை மற்றும் இலாபத்திற்காக விற்கும் பல நிறுவனங்கள் போல் நீங்களும் ஒரு நிறுவனமே, வழக்கிற்காக வாதி நிறுவனத்தின் தனிப்பட்ட Sole selling Agent என சொல்வது தவறு என்றால் சரியல்ல நாங்கள் தான் வாதி நிறுவனத்தின் Distributor ஆவோம். வாதி மற்றும் பிரதிவாதி நிறுவனத்திற்கிடையே exclusivity மற்றும் Non exclusivity க்கான ஆவணம் ஏதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. பொருட்களை வாங்கி விற்பது சம்பந்தமாக நீங்களும் வாதி நிறுவனமும் மின்னஞ்சல் தொடர்பு வைத்துக் கொள்வது உண்டா என்றால் உண்டு. நீங்கள் வாதி நிறுவனத்திற்கு பிராதில் கோரியுள்ளவாறு தொகையை செலுத்த கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 5 ல் கடந்த 11.05.2022 ல் நிலுவைத் தொகை கேட்டு வாதி நிறுவனத்திற்கு நீங்கள் மின்னஞ்சல் அனுப்பி உள்ளீர்கள் என்றால் சரிதான், பொருட்களை Purchase செய்ததற்கு Incentive தொகையை கழித்து, நிலுவைத்தொகையை தெரிவிக்குமாறு மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. அதன் பிறகு வாதி நிறுவனம் பல முறை மின்னஞ்சல் மூலமாக நிலுவைத்தொகையை செலுத்த அறிவுறுத்தியது என்றால் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது ஆனால் நிலுவைத்தொகை வேறுபாடாக இருந்தது. வாதி நிறுவனம் அனுப்பிய மின்னஞ்சலுக்கு நீங்கள் பதில் அனுப்பவில்லை என்றால் சரிதான் தொலைபேசி மூலம் உரையாடினோம். வா.சா.ஆ.3 ல் Invoice களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பொருட்களும் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 ல் பொருட்கள் திருப்பி எடுக்கப்பட்டும் மீதம் உள்ள தொகை குறிப்பிடப்பட்டும் தரவேண்டிய நிலுவைத்தொகையான ரூபாய். 3,08,084/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களில் நிலுவைத்தொகை ரூபாய். 3,08,084/- என குறிப்பிடப்படவில்லை. வாதி மற்றும் பிரதிவாதி நிறுவனத்திற்கிடையே எந்த ஒரு எழுத்துபூர்வமாக ஒப்பந்தம் இல்லாத நிலையில், வாதி நிறுவனம் அனுப்பிய மின்னஞ்சலுக்கு உரிய பதில் அனுப்பாத நிலையில், வாதி பிராதில்

கோரும் தொகையை செலுத்த தேவையில்லை என சொல்வது தவறு என்றால் சரியல்ல. வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2025.07.15 16:58:35 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.